மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்தப் பாக்குக் கன்றுகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதாகத் தகவல் இல்லை. அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லக்கூடும். ஆனால் இங்கே சேலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில்தான் பெருவாரியாக—திருநெல்வேலியில் ஒரு பகுதியிலும்—இந்தக் கன்றுகள் வளர்க்கப்பட்டு, இந்தப் பகுதிகளுக்கு வழங்கப்படுகின்றன.

புதுக்கேசாபுரம் சோதனைச் சாவடி

* 35 வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உணவு வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுக்கா புது கேசாபுரம் செக் போஸ்டில் (உணவு தானிய பரிசோதனைச் சாலை) அநீதி நடைபெற்றதைக் குறித்து 6—9—1967-ல் அத்தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களிடம் இருந்து புகார் மனு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம்.

(இ) அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் இருவர் அரிசி எடுத்துச் சென்றதால் அரிசி கைப்பற்றப்பட்டது. விதிகளுக்கிணங்கியே இந்தப் பறிமுதல் செய்யப்பட்டதால், புகார் மனு மீது நடவடிக்கை எதுவும் எடுக்க அவசியம் ஏற்படவில்லை.

Mixture of Cow's and buffaloe's milk

* 36. Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether a new microbiological product consisting of dead bacteria, coloured with a stain, has been discovered to detect adulteration of cow's milk with buffaloe's milk?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஆம். எருமைப் பாலுடன் பசும் பால் கலப்படம் செய்யப்படுவதை கண்டுபிடிப்பதற்கென ஒரு பரிசோதனை முறை உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், எருமைப் பாலில் 10 சதவீதம் வரை பசும் பால் கலப்படம் செய்யப்பட்டிருப்பதை மட்டுமே இப் பரிசோதனை முறை மூலம் கண்டுபிடிக்க இயலும்.

THIRU K. VINAYAKAM: Sir, was any prize given to the person who was responsible for the discovery of this microbiological product consisting of dead bacteria coloured with a stain? If so, is this practice introduced to detect people who are committing this kind of offence?